I Additional District Court, Thoothukudi.

O.S.No. 7/2023 நாள் : 10.03.2026 வா.சா.1– திரு.அறவாழி.

குறுக்கு விசாரணை :–

வழக்கு சொத்துக்கள் இரண்டு சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் குறித்து வா.சா.ஆ 4 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். கிரையத் தொகை ரூ.14,50,000/– பேசப்பட்டு ரூபாய் 1 லட்சம் முன் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மீதி பணத்தை கொடுத்து இரண்டு மாத காலத்திற்குள் கிரையம் முடிப்பதாக வா.சா.ஆ 4 ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு மாத காலத்தில் நான் பாக்கித் தொகையை செலுத்தி கிரையம் செய்து கொள்ள முன்வரவில்லை என்றால் இரண்டு மாதத்திற்குள் ரூ.9,50,000/– கொடுத்தேன். அதற்கான மேற்குறிப்பு வா.சா.ஆ 4 ல் முதல் தாளின் பின்பகுதியில் எழுதப்பட்டுள்ளது. மேற்படி ரூ.9,50,000/–த்தை நான் பிரதிவாதிக்கு கொடுத்ததாக அதில் குறிப்பிட்டு எழுதப்படவில்லை. ரூபாய்.9,50,000/– என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. நான் மேற்கொண்டு ரூபாய் ஒரு லட்சம் கொடுத்தவிட்டு கூடுதலாக அவகாசம் கேட்டேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் வங்கி மூலமாக பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு ரூபாய் ஒரு லட்சம் அனுப்பியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகும் முழுபணத்தையும் செலுத்தி என் கிரைய ஒப்பந்த பங்கை நிறைவேற்ற நான் முன்வரவில்லை என்றால் சரியல்ல. அதற்கு பிறகு வா.சா.ஆ 4 ல் உள்ள 1வது தபசில் சொத்தை நான் சொன்ன பாலசேகர் என்ற நபர் பெயரில் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் ரூ.7,50,000/–ம் பெற்றுக் கொண்டு எழுதிக் கொடுத்தார். 02.03.2018 ல் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். பாக்கித் தொகையை கேட்டு பிரதிவாதி என்னை

அணுகினார் என்றும், நான் பாக்கித் தொகையை கொடுத்து கிரையம் செய்து கொள்ள முன்வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 4 தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் 2022ல் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். உண்மையில் நான் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராகவும், விருப்பமாகவும் இல்லை என்றால் சரியல்ல. நான் வீட்டைதான் கிரையம் எழுதி வாங்கினேன் என்றால் காலி மனையைத்தான் நான் சொன்ன நபர் பெயரில் கிரையம் வாங்கினேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் சொத்துக்களுக்கு முன்பணம் கொடுத்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு கூடுதல் விலைக்கு விற்பதுதான் என் தொழில் என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி சொத்தை என் பெயரில் கிரையம் பெறாமல் பாலசேகர் பெயரில் கிரையம் எழுதிக் கொடுக்க நானே ஏற்பாடு செய்தேன் என்றால் சரியல்ல. என் மனைவி பேரூராட்சி தலைவராக இருக்கிறார் என்றால் சரிதான். அதனால் அந்த அதிகாரத்தை பயன்படுத்தி குறைந்த விலையில் சொத்தை வாங்கி அதிக விலைக்கு விற்று அடாவடி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் தவறு. மேற்படி மேற்குறிப்பை நானே உருவாக்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. அதில் சாட்சி கையொப்பம் இல்லை. தற்போது தாவா சொத்தில் வீடு உள்ளது. அதில் வீடு இல்லை என்றும், காம்பவுண்ட் சுவர் மட்டும்தான் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சொத்தை பதிவு செய்வதற்கு தீர்வை ரசீது கட்டாயமில்லை என்றால் தவறு. அங்கு வீடு இல்லை என்பதால் தீர்வை ரசீதும் இல்லை என்றால் சரியல்ல. தீர்வை ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு காலவரைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்ய

வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 ன் படி ஏற்கனவே ஒரு கிரையம் முடித்து கொடுக்கப்பட்டது என்றும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல. தற்போது சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால் சொத்தை அபகரிக்க பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 ன் படி எனக்கு எந்த உரிமையும் ஏற்படுவதில்லை என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.03.10 17:33:53 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.